**அம்பகமுவ பிரதேச சபை - 2013**
**நுவரெலியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பகமுவ பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் படி காணாமல் போயிருந்ததாக அறிக்கையிடப்பட்ட 5472 நூலகப் புத்தகங்களின் பெறுமதியான ரூபா 578,654 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நூலகப் புத்தகங்களின் பெறுமதியில் உள்ளடங்கியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 166,878 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 450,774 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் படி அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 365,092 கூட்டுத்தொகை ஆனமையால் ரூபா 85,682 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த மூலதன உதவிகளின் பெறுமதி ரூபா 68,663,057 ஆக இருந்ததுடன் அதில் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,663,591 ஆக இருந்தது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 26,642,945 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் காண்பிக்கப்பட்ட ரூபா 95,464,000 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் உரித்தை உறுதிப்படுத்தக்கூடிய உரித்துறுதி, கையளித்தல் கட்டளை மற்றும் நில அளவை வரைபடம் என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் 107(2)(1) ஆம் உப பிரிவு | மீளாய்வாண்டின் போது சபை அதிகாரப் பிரதேசத்தில் தனியார் காணிகளில் ஆபத்தை விளைவிக்கும் மரங்களை அகற்றுவதற்காக சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 174,787 தொகைக்காக அந்தக் காணி உரிமையாளர்களிடமிருந்து ரூபா 4,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 ஏப்ரல் 05 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | வாகனம் பயன்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு எரிபொருள் பட்டியல் மற்றும் ஓட்ட அட்டவணை பெறப்படாது உறுப்பினர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 2,500 வீதம் ரூபா 315,000 தொகை எரிபொருள் படியாக 2013 ஏப்ரல் முதல் செப்தெம்பர் வரை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,666,978 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,743,642 ஆக இருந்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீளாய்வாண்டின் மிகையினை முன்னைய ஆண்டின் மிகையுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 6,076,664 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக பின்வரும் வருமானக் குறைவும் செலவின அதிகரிப்பும் அடிப்படைக் காரணமாக இருந்தது.

| மீண்டுவரும் வருமானம் | 2013 | 2012 | முரண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 5,809,900 | 6,330,787 | (520,887) | 08.22 |
| ஏனைய வருமானம் | 8,207,841 | 14,011,128 | (5,803,287) | 41.42 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| சும்பளமும் படியும் | 35,571,701 | 33,224,758 | (2,346,943) | 07.06 |
| பிரயாணச் செலவினம் | 1,706,872 | 1,404,017 | (302,855) | 21.57 |
| வழங்கல் மற்றும் உபகரணம் | 6,850,416 | 5,576,463 | (1,273,953) | 22.84 |
| மூலதனச் சொத்துக்கள் மற்றும் பழுதுபார்த்தலும் பராமரிப்பும் | 6,661,746 | 4,166,422 | (2,495,324) | 59.89 |
| மானியப் பணம், பங்களிப்புப் பணம் மற்றும் நிவாரணம் | 1,020,609 | 404,849 | (615,760) | 152.09 |

(ஆ) மீளாய்வாண்டின் சம்பள மீளளிப்பாக ரூபா 27,845,455 தொகை கிடைத்திருந்த போதிலும் சம்பளம் மற்றும் படியாக ரூபா 35,571,701 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி சபையின் வருமானத்தில் ரூபா 7,726,246 தொகையொன்று சபை ஊழியர்களின் சம்பளம் செலுத்துவதற்கு செலவிடப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் சம்பள மீளளிப்புத் தவிர சபையின் மீண்டெழும் வருமானத்தில் 32.27 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

**2013.12.31 இல் நிலுவை**

| வருமான விடயம் | 2013.01.01 இல் நிலுவை | 2013.01.01 இல் நிலுவையில் அறவீடு | 2013 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டில் | ஆண்டின் பற்றுச்சீட்டிலில் அறவிடப்பட்டவை | 2013.01.01 இல் காணப்பட்ட நிலுவை | 2013 ஆம் ஆண்டின் பற்றுச்சீட்டில் | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி | 2,063,722 | 917,569 | 5,965,806 | 4,367,633 | 1,146,153 | 1,598,173 | 2,744,326 |
| வாடகை | 1,852,127 | 276,841 | 8,388,339 | 7,718,105 | 1,575,286 | 670,234 | 2,245,520 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 182,421 | - | 3,823,270 | 3,823,270 | 182,421 | - | 182,421 |
| ஏனையவை | 4,054,398 | 187,468 | 1,315,921 | 658,446 | 3,866,930 | 657,475 | 4,524,405 |

மேற்கூறப்பட்ட விபரங்களின்படி மீளாய்வாண்டில் மொத்த வருமான அறவீடு மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானத்தடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 சுற்றுலா ஹோட்டல் அனுமதிப்பத்திரக் கட்டணம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் அந்த அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்ட 13 ஹோட்டல்கள் காணப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரையிலும் அனுமதிப்பத்திரக் கட்டணம் 03 ஹோட்டல்களிலிருந்து மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. ஒரு ஹோட்டலுக்காக தொழில் முயற்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட புரள்வினை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 வாடகை

1980 திசெம்பர் 30 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 இன் 46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை கடை வாடகை மதிப்பீடு திருத்தப்பட்டு உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சுற்றறிக்கை ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக சபை பாரியளவான வருமானத்தை இழந்திருந்தது. அவ்வாறே கடையை வாடகைக்குப் பெற்றவர்களினால் உடன்படிக்கைகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்காகவும் தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,506,680 தொகையான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 3,235,541 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

### 2.3.5 விளம்பர அறிவித்தல் கட்டணம்

விளம்பர அறிவித்தல் பதாதை பொருத்தும் போது டயலொக் நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்ட கட்டணம் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கினிகத்ஹேன நகரத்திற்கு அருகிலுள்ள பிரதேசத்தில் தாபிக்கப்பட்ட 76 விளம்பர அறிவித்தல் பதாதைகளின் 5,338 சதுர அடிகளுக்காக ரூபா 771,700 தொகை அறவிடவேண்டியிருந்தது.

### 2.3.6 ஏனைய வருமானம்

(i) கினிகத்ஹேன நகரில் அமைக்கப்பட்ட பொது மலசலகூடம் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளுக்காக ரூபா 93,359 தொகை மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த போதிலும் முன்னைய வருடங்களைப் போன்று மலசலகூடம் கேள்வி மூலம் வாடகைக்கு வழங்கி அதன் மூலம் எவ்வித வருமானமும் சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 03 இறைச்சிக் கடைகள் மற்றும் 02 பொது மலசலகூடங்கள் என்பன 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வாடகைக்கு வழங்கியதால் சபைக்கு அறவிடவேண்டிய ரூபா 133,042 நிலுவைப் பணம் கணக்காய்வுத் திகதியான 2014 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரக் கட்டணம்

2013 ஆம் ஆண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த விடுதி ஹோட்டல், யாத்திரிகர்கள் தங்குமிடம் மற்றும் விருந்தினர் விடுதிகள் என்பவற்றின் 42 வியாபாரங்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 08 வியாபார வகைகளுக்குரிய கைத்தொழில் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படாமல் நடாத்தப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட போதிலும், அவற்றை நடாத்திச் செல்கின்ற நபர்களுக்கு எதிராக 2000 இன் 53 ஆம் இலக்க திருத்தப்பட்ட சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ''அ'' பிரிவின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பௌதீக மற்றும் நிதி செயலாற்றலில் காணப்படுகின்ற செயல்முன்னேற்ற அறிக்கை மற்றும் கட்டுப்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக செயலாற்றல்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின்படி பிரதேச சபையினால் பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ரூபா 40,911,936 செலவினம் செய்யப்பட்டிருந்த

போதிலும் அரசாங்கத்தின் பங்களிப்பு மற்றும் ஏனைய மிகைக்கட்டணங்களின் மூலம் ரூபா 32,701,532 தொகை மாத்திரமே கிடைத்திருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | அரசாங்கத்தின் பங்களிப்பு | ஏனைய வருமானம் | செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சுகாதார சேவை | 4,712,532 | 6,521,572 | 21,129,695 |
| பௌதீக | 6,150,234 | 3,459,784 | 9,408,013 |
| நீர்க் கட்டணம் | 1,495,908 | 1,431,869 | 4,586,209 |
| பொதுப் பயன்பாடுகள் | - | 7,857,418 | 577,256 |
| நலன்புரி | 903,672 | 168,543 | 5,210,763 |
| | 13,262,346 | 19,439,186 | 40,911,939 |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

சபையினால் நடாத்தப்படுகின்ற சேவைகளை தொடர்ச்சியாகவும் செயற்திறனானதாகவும் நடாத்திச் செல்வதற்காக அமைய, நாட்கூலி மற்றும் நாளாந்த படியின் அடிப்படையில் சம்பளம் பெறுகின்ற இரண்டு உத்தியோகத்தர்களும் 81 ஊழியர்களும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் உள்ளடக்கப்படாமையினால் அவர்களுக்கு சம்பளம் மற்றும் படியாக ரூபா 1,026,027 தொகை மாத்திரம் மாதாந்தம் சபை நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாக சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கு இருந்த பணத்தில் பாரியளவிலான அளவு சம்பளத்திற்காக செலவிடுவதற்கு ஏற்பட்டிருந்தது.

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிசோதனையின் போது தலைமை அலுவலகத்தின் பதிவேட்டுப் பொருட்கள் மற்றும் களஞ்சிய உபகரணங்களின் உள்ளபடியான மீதி மாத்திரம் காண்பிக்கப்பட்டமையினால் பற்றாக்குறை மற்றும் மிகைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின்படி 08 பொது நூலகங்களில் ரூபா 391,421 பெறுமதியான காணாமல் போன 4,718 புத்தகங்கள் மற்றும் காணாமல் போன உபகரணங்களின் பெறுமதிகளைக் கண்டறிந்து அதற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 ஒப்பந்த நிருவாகம்

பகவன்தலாவ சென்மேரி பாடசாலைக் கட்டிட நிர்மாண வேலை 1:2:3 (3/4) கொங்கிரீட் கலவையில் வடிகாண் கட்டுவதற்காக மேலதிகமாக கொங்கிரீட் கியூப் 5:3 மீற்றருக்காக ரூபா 30,502 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132 ஆவது பிரிவின் கீழ் சபை நிதியத்திலிருந்து செலுத்துவதற்கு சட்டரீதியான நிதியேற்பாடு ஒதுக்கப்படாத செயற்பாடான பிரதேச சபை முன்பள்ளிப் பாடசாலை மற்றும் தனியார் முன்பள்ளிப் பாடசாலைகளில் வெளியேறும் விழாவிற்காக பரிசு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 65,427 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3.7 செயற்திட்ட அமுலாக்கலில் தாமதம்

மிருக வள மற்றும் கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்தலில் நீண்ட கால தாமதமொன்று காணப்பட்டது.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பாதீட்டின் படி மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடுசெய்த போது 06 வருமான விடயங்களில் 26 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையும், 05 செலவின விடயங்களில் 13 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் நிதியேற்பாடுகளுக்கு மேலதிகமாக குறைநிரப்பு பாதீடு மற்றும் செலவின ஒத்துமாறல் மூலம் நிதியேற்பாடு வழங்கப்பட்ட பின்னரும் அந்த எல்லையினை விஞ்சி 02 செலவின தலைப்புக்களில் ரூபா 884,349 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) 04 வருமானத் தவைப்புக்களுக்குரிய 07 உப வருமான விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்ட ரூபா 3,700,000 தொகையான வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 04 வருமானத் தலைப்புக்களுக்காக பாதீடு செய்யப்பட்ட ரூபா 29,554,850 தெகையான வருமானத்தை உழைப்பதற்கு முடியாதிருந்தது.

## 4.2 தீர்வு காணப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

# 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) இருப்புக் கட்டுப்பாடு
(எ) ஒப்பந்த நிர்வாகம்